புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • நவம்பர் 02, 2023 • புரட்சி 23 • முழக்கம் 42 • விலை ரூ.3.00

## சேலம் பல்கலை : துணைவேந்தர் - பதிவாளரை பதவி நீக்கம் செய்க

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி வெளியிட்டுள்ள அறிக்கை :

***"எங்கே செல்கிறது சேலம் பெரியார் பல்கலைக் கழகம்?"***
***"சமூக நீதியை ஒழிக்கத் திட்டமா?"***
***"அரசு உடனே தலையிட வேண்டும்!"***

சேலம் பெரியார் பல்கலைக் கழகம் இடஒதுக்கீட்டைக் கடைபிடிக்கத் தொடர்ந்து மறுப்பது இயல்பான ஒன்றாக மாறிவிட்டது.

நூலகர், உடற்கல்வி இயக்குனர் போன்ற பதவிகள் பட்டியலினத்திற்கு வழங்க மறுத்து, பொதுப் போட்டிக்கு சென்றதை திராவிடர் விடுதலைக் கழகம் கடுமையாக எதிர்த்து வரும் நிலையில், தற்போது பதிவாளர் தேர்வும் அப்பட்டமாக விதிகள் மீறப்பட்டு இன்று நேர்காணல் நடைபெறுவதாக அறிகிறோம்.

பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம், அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கங்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்தும் துணை வேந்தர் கண்டு கொள்ளாமல் நேர்காணல் நடைபெறுவதாக அறிகிறோம்.

பல்கலைக் கழகங்கள் சமூக நீதியைக் கண்ணாகப் போற்றும் தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்பது துணை வேந்தருக்கு தெரியுமா என்பது தெரியவில்லை.

தேர்வாணையருக்கு ஒருவரே விண்ணப்பித்த நிலையில் போட்டி இல்லை எனில் நேர்காணல் நடத்த கூடாது என்ற விதியையும் மறந்துவிட்டாரா துணை வேந்தர் என்பதும் புரியவில்லை.

ஏற்கெனவே ஒரு துறையில் ஒருவர் மட்டும் பேராசிரியர் பணிக்கு விண்ணப்பித்தார் என்ற காரணத்தால் நேர்காணலை நடத்தாத இதே பெரியார் பல்கலைக் கழகம், இன்று



தேர்வாணையருக்கு நேர்காணல் நடத்த வேண்டியது ஏன்?

பேரம் படிந்து விட்டது. பதிவாளர் விசுவநாத மூர்த்தி, தேர்வாணையர் சந்திரசேகர் என்பது பரவலாக பேசும் பொருளாக மாறியுள்ளது.

சமூக நீதியை மட்டுமல்ல; ஒற்றை விண்ணப்பத்தை மட்டும் வைத்துக்கொண்டு நேர்காணல் குறித்த விதிகளையும் மீறி அப்பட்டமாக செயல்படும் துணை வேந்தர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

அரசின் அனுமதியோடு பட்டமளிப்பு விழா நடைபெறுவது தான் மரபு. ஆனால் நவம்பர் 24 பட்டமளிப்பு விழா என்று பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது அரசின் அனுமதியோடு தானா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்த நிலையில் வரும் 6ம் தேதி சிண்டிகேட் கூட்டம் நடைபெறுவதாக பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. இதில் அரசுத் துறை செயலாளர்கள் எட்டு பேர் ஆட்சிக்குழு உறுப்பினராக உள்ளனர். இவர்கள் கட்டாயம் ஆட்சிக் குழுவில் கலந்து கொண்டு பல்கலைக் கழகத்தின் மீது அரசுக்கு உள்ள எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் சிண்டிகேட் கூட்டத்தை ரத்து செய்ய வேண்டும். அரசின் பிரதிநிதிகள் இல்லாமல் பதிவாளர் நேர்காணல் நடத்துவது மறைமுகமாக பல்கலைக் கழகம் அரசுக்கு விடுக்கும் சவாலாகும். நேற்று மூத்த பேராசிரியர் பதவிக்கு போலி சான்றிதழ் மற்றும் அரசு அமைத்த விசாரணை வளையத்தில்உள்ள தமிழ்த் துறை பெரியசாமிக்கு நேர்காணல் நடத்துகிறார் துணை வேந்தர். ஏற்கெனவே பதிவாளர் பொறுப்பு தங்கவேலுவுக்கு மூத்த பேராசிரியர் பதவி உயர்வு வழங்கப் பட்டு உள்ளது. அவர் மீதும் அரசு விசாரணை நிலுவையில் உள்ளது. இதற்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்; காலம் தாழ்த்தாமல் துணைவேந்தர் மற்றும் பதிவாளர் அவர்களை பணிநீக்கமோ அல்லது பணியிடை நீக்கமோ செய்து, ஏற்கனவே ஒருமுறை இந்திய ஆட்சிப் பணியில் உள்ள ஒருவர் தலைமையில் பல்கலை நிர்வாகத்தை ஒப்படைத்தது போல இப்போதும் நியமித்து முறைகேடுகளைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசினரையும், குறிப்பாக உயர்கல்வித்துறை அமைச்சகத்தையும் திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**இங்கணம்,**
**கொளத்தூர் தா.செ.மணி,**
**தலைவர்,**
**திராவிடர் விடுதலைக் கழகம்.**
31.10.2023

## சட்டப்படி நாத்திகத்தை பரப்பும் உரிமை எனக்கு உண்டு

இந்தியாவில் பெரிய மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாட்டில் வசிக்கும் பெரும்பான்மையான மக்கள் திராவிட சித்தாந்தத்தை பின்பற்றுகிறார்கள். நானும் அந்த சித்தாந்தத்தின் வாரிசுகளில் ஒருவன் என்பதால் தான் எனக்கு வாக்களித்து பதவியில் அமர்த்தியிருக்கிறார்கள். திராவிடக் கொள்கைகளையும், சித்தாந்தத்தையும் நான் பரப்ப வேண்டும் என்பது எங்கள் மக்களின் எதிர்ப்பார்ப்பு. திராவிட இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பில் நான் இருக்கிறேன், நான் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய கொள்கைகள், திராவிட சித்தாந்தத்தின் அடிப்படையில் அமைந்தவை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி செயலாளராகவும் பொறுப்பில் இருக்கிறேன். நான் பேசும் இக்கருத்துக்கள்,அரசியலமைப்பை உருவாக்கியவர்களால் முன்மொழியப்பட்டவை. மகத்தான திராவிடத் தலைவர்களான தந்தை பெரியார், பேறறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியலைப்புச் சட்டத்தை நாட்டுக்குத் தந்த டாக்டர் அம்பேத்கர் போன்ற என் முன்னோடிகளின் கருத்தைத்தான் நான் பேசுகிறேன்.

நான் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இரண்டு கோடி பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நான் பேசும் சித்தாந்தத்தை உள்வாங்கி நம்புகிறவர்கள். எனக்கு எதிராக மனு செய்திருப்பவர், எங்கள் மாநிலத்தின் பெரும்பான்மையான மக்கள் நம்பக்கூடிய ஒரு சித்தாந்தத்தின் மீது அதற்கு நேரெதிரான கருத்துக்களை திணிக்க முயல்கிறார். எல்லா மதங்களின்



மீதும் மிகுந்த மரியாதை வைத்திருக்கிறேன். இம்மண்ணில் நிலவும் எந்தவொரு நம்பிக்கையை குறைவாக மதிப்படவோ, அவமதிக்கவோ எனக்கு விருப்பமில்லை. அதே நேரத்தில் மதத்தின் பெயரால் சமூகத்தில் நிலவும் பகுத்தறிவற்ற மூட நம்பிக்கைகள், மதத்தின் பெயரால் மக்களை பிளவுபடுத்துவது போன்ற தீமைகளை எடுத்துரைப்பது எனது கடமை.

அரசியலமைப்புச் சட்டம் 25வது பிரிவின் படி பகுத்தறிவாளராகவும், நாத்திகராகவும் இருப்பதற்கான உரிமை எனக்கு உண்டு. 25வது பிரிவு ஆத்திகர்களுக்குக்கான பரப்புரை உரிமையை மட்டுமே தருகிறது என்று எனக்கெதிரான மனு போட்டவர் தவறாக புரிந்துகொண்டிருக்கிறார். நாத்திகத்தை ஏற்றுக்கொண்டவர்களும் அது குறித்து பரப்புரை செய்யும் உரிமையை இந்த பிரிவு வழங்குகிறது. இந்த நேர்மையான மன்றத்தில் ஆத்திகம் எதிர் நாத்திகம் விவாதம் தேவையற்றது. ஒரு நீதிமன்றம் தீர்ப்பளிக்ககூடிய பிரச்சனையும் இதுவல்ல.

தமிழ்நாடு என்பது 20ஆம் நூற்றாண்டில் சமூகநீதியின் குரலை சத்தமாய் ஒலித்த மாநிலம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் தற்போது தமிழ்நாட்டை ஆண்டுக்கொண்டிருக்கும் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் போன்றோர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சாதிய மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி சமூகநீதிப் புரட்சியில் தங்களைப் பிணைத்துக் கொண்டவர்கள். சமூக அநீதிகளைக் களைய இதே பணியை தேசியளவில் செய்தவர் டாக்டர் அம்பேத்கர். தன்னுடைய வீட்டிலோ அல்லது சமூகத்திலோ பெண்களுக்கு சமமான இடத்தை பாரம்பரியமான இந்து நம்பிக்கை வழங்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறேன்.

ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கு கல்வியிலோ, வேலைவாய்ப்பிலோ சம இடம் வழங்கப்படவில்லை. இந்நிலையில் பெண்களுக்கான சம உரிமை மற்றும் வாய்ப்புகள் குறித்த அக்கறையோடு சிந்திப்பது நான் சார்ந்த திராவிட இயக்கம். எனவே வேறெங்கும் இல்லாத அளவுக்கு இங்குதான் பெண்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்கக் கூடிய எண்ணற்ற திட்டங்கள் நடைமுறைக்கு வந்துள்ளன. பெண்களுக்கு மட்டுமல்ல; மூன்றாம் பாலினத்தவருக்கும் சம உரிமையும், சமூகத்தில் அவர்களுக்கான நியாயமான இடத்தையும் கொடுத்து சுயமரியாதையை முன்னெடுக்கிறது எங்கள் திராவிட சித்தாந்தம். இதுவும் கூட பாரம்பரியமான நம்பிக்கைகளின் அடிப்படையில் மறுக்கப்பட்டது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**சனாதனம் குறித்து பேசிய வழக்கில் திமுக இளைஞரணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.**

### தலையங்கம்

## ஒன்றிய ஆட்சியின் தேர்தல் பத்திர மோசடி

2017ஆம் ஆண்டு ஒன்றிய ஆட்சி நாடாளுமன்றத்தில் நிதி மசோதாவின் கீழ் தேர்தல் பத்திரம் எனும் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் சட்டத்தை கொண்டுவந்தது. நிதி மசோதாவுக்கு மாநிலங்களவையின் ஒப்புதல் தேவையில்லை என்பதால் மக்களவையில் மட்டும் இதை நிறைவேற்றிக் கொண்டார்கள். முதலில் தாக்கல் செய்யப்பட்ட போது வெளிநாட்டு நன்கொடைகள் தடைசெய்யப்பட்டிருந்தன. பிறகு சட்டத் திருத்தம் கொண்டுவந்து வெளிநாட்டு நன்கொடைகள் பெறுவதற்கு வழி ஏற்படுத்திக் கொண்டார்கள். பாரத ஸ்டேட் வங்கியில் ஒருவர் பணம் கொடுத்து இந்த பத்திரத்தை வாங்கலாம். பிறகு அந்த பத்திரத்தை விரும்பும் கட்சிகளுக்கு நன்கொடையாக தந்துவிடலாம், பதினைந்து நாட்களுக்குள் பாரத ஸ்டேட் வங்கியில் பத்திரத்தை பணமாக்கிக் கொள்ள வேண்டும். இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் வந்துள்ளன. தலைமை நீதிபதியின் கீழ் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சட்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்து வருகிறது. வெளிப்படைத்தன்மை வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த சட்டம் கொண்டுவரப்பட்டது என்று ஒன்றிய ஆட்சி கூறியது. இப்போது குரலை மாற்றிக் கொண்டு பேசுகிறது.


உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய அரசு வழக்கறிஞர் ஆர்.வெங்கட்ரமணி கடந்த திங்கட்கிழமை (30.10.2023) ஒன்றிய அரசு சார்பில் ஒரு மனுவை தாக்கல் செய்துள்ளார். நன்கொடையாளர்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் உரிமை அவர்களுக்கு கிடையாது என்றும் அடிப்படை உரிமைகளுக்கு கட்டுப்பாடு விதிக்க அரசுக்கு உரிமை உள்ளது என்றும் ஒன்றிய அரசு அந்த மனுவில் தனது மக்கள் விரோத கருத்தை பதிவு செய்துள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இதில் முறைகேடுகள் நடப்பதற்கு வழி இருக்கிறது என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.

2019ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அரசியல் கட்சிகள் பெற்ற நன்கொடை வங்கிக் கணக்கு, நன்கொடையாளர்களின் பெயர்களை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்க உத்தரவிட்டிருந்தது. அந்த ஓராண்டு மட்டும் தேர்தல் ஆணையத்திற்கு இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. ஒன்றிய ஆட்சி அதற்கு பிறகு தேர்தல் ஆணையத்திடம் இந்த விபரங்களை சமர்ப்பிக்கவில்லை. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள் அந்த ஓராண்டுக்கு மட்டுமே என்று ஒன்றிய அரசு கூறியதை உச்சநீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இதுவரை கட்சிகள் பெற்ற நன்கொடை விபரங்களை, வங்கிக் கணக்குகளை, நன்கொடையாளர் விபரங்களை, தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் இப்போது உத்தரவிட்டிருக்கிறது. வழக்கு தொடர்ந்த NGO என்ற அமைப்பின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் ஒரு அதிர்ச்சியான தகவலை வெளியிட்டார். தேர்தல் ஆணையமும், ரிசர்வ் வங்கியும் இந்த தேர்தல் பத்திரத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தன, அதையும் மீறி இதை ஒன்றிய அரசு அமுல்படுத்தியதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு ஆண்டுகளில் 31 அரசியல் கட்சிகள் ரூ.16,438 கோடி நன்கொடையாக பெற்றுள்ளன. இதில் தேர்தல் பத்திரம் வழியாக கிடைத்த நன்கொடை மட்டும் ரூ.9,188 கோடி (55.9%) கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் பிற வழிகளில் கிடைத்த நன்கொடை ரூ.2,635 கோடி (16%) இதில் பாரதிய ஜனதா கட்சிக்கு தேர்தல் பத்திரம் வழியாக கிடைத்த நன்கொடை ரூ.5,272 கோடி (74.7%) பிரசாந்த் பூஷன் உச்சநீதிமன்றத்தில் தந்துள்ள புள்ளி விவரங்கள் இவை. ஆனால் இவையெல்லாம் மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஒன்றிய ஆட்சி கூறுவதுதான் இவர்களின் நேர்மையின் அடையாளமா?

வெளிநாட்டு பணத்தொடர்பு குற்றங்களில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறையை பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை குறிவைத்து வேட்டையாடும் ஒன்றிய ஆட்சி தனக்கான தேர்தல் நன்கொடைகளை பெறுவதில் மட்டும் முறைகேடுகளை சட்டமாக்கிக் கொள்வதற்கு பெயர் என்ன? இதுதான் பார்ப்பன பாசிசம்

## பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இப்படி ஒரு ஆளுநர்



*பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் சர் சார்லஸ் திரவேல்யன் என்ற ஒரு ஆளுநர் இருந்தார். அவர் சனாதனப் பெருமை பேசாதவர், ஆரியர்களின் பக்கம் நிற்காதவர், அரசுக்கு நெருக்கடி கொடுக்காதவர், ஆனால் சென்னை மாகாண மக்களால் மிகவும் போற்றப்பட்டவர். மக்களுக்காக பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்தே போர்க்கொடி உயர்த்தியவர்.*

*1833 ஆம் ஆண்டு சென்னை, பம்பாய் மாகாண உரிமைகளைப் பறித்து கல்கத்தாவில் உள்ள மத்திய அரசிடம் சரணடைய செய்கின்ற ஒரு சட்டத்தை இயற்றியது. அதை பல மாகாண அரசுகள் ஏற்றுக்கொண்டன. அன்றைய சென்னை மாகாண ஆளுநராக இருந்த சார்லஸ் திரவேல்யன் மட்டும் கடுமையாக, முதுகெலும்போடு பிரிட்டிஷ் அதிகாரத்தை எதிர்த்தார். நான் எஜமான விசுவாசியாக இருக்க முடியாது என்றும் கூறினார். இந்த உரிமைகளைப் பறிக்கக் கூடாது என்றார். புகையிலை வரி, உப்பு வரி, தொழில் வரி என்று பிரிட்டிஷ் ஆட்சி மாகாணங்களுக்கு வரி விதித்த போது, அத்தனை வரிகளையும் துணிச்சலாக எதிர்த்தார். வரி போடுவதை நிறுத்தி அரசின் வீண் செலவுகளை குறையுங்கள் என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு எடுத்துரைத்தார்.*

*மாகாண அரசுகளின் ஒப்புதல் இன்றி எப்படி வரி போடுவீர்கள் என்று தட்டிக் கேட்டார். தனது எதிர்ப்பை வெளிப்படையாக தெரிவித்து, அதை பத்திரிகைகளிலும் அறிக்கையாக வெளியிடச் செய்தார். ஆடிப்போனது கல்கத்தாவில் இருந்த பிரிட்டிஷ் மத்திய ஆட்சி.*

*14 மாதங்கள் மட்டுமே அவரை பதவியில் வைத்திருந்த பிரிட்டிஷ் அரசு, உடனடியாக அவரை திரும்பப்பெறும் உத்தரவையும் பிறப்பித்தது. அவரை திருப்பி அனுப்புகிற உத்தரவை பிறப்பித்த பிரிட்டிஷ் அதிகாரி சர் சார்லஸ் திரவேல்யனுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்த கடிதத்தில் :- நேர்மையான அதிகாரியை இந்தியா இழந்துவிட்டது, இது இந்தியாவிற்கு இழப்பு, நீங்கள் செய்த செயல் மத்திய அரசையும், அதன் அதிகாரத்தையும் எதிர்த்து பொதுமக்களை புரட்சிக்கு தூண்டுவதற்கு இணையாக அமைந்துவிட்டது என்று எழுதியிருந்தார்.*

*அதற்கு திரவேல்யன் பதில் கடிதம் ஒன்றை எழுதினார். அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. “வட இந்தியர்களை விட தென்னிந்தியர்கள் வேறுபட்டவர்கள், எங்கள் மாகாணத்திற்கு ஏற்கனவே சட்டம் இயற்றும் அதிகாரம் இருந்தது. அதைப் பறித்தவர்கள் நீங்கள் (பிரிட்டிஷ் ஆட்சி). எங்களை கேட்காமலேயே பறித்தது தவறு, எங்கள் தென்னிந்தியாவில் தான் பிரிட்டிஷ் ஆட்சி முதன்முதலாக நிறுவப்பட்டது என்பதை மறந்துவிடக்கூடாது, அதற்கு பிறகு தான் பம்பாய், கல்கத்தா உள்ளிட்ட மாகாணங்களுக்கு சென்றீர்கள், நாங்கள் பெரிய மாகாணத்திற்கு உரியவர்கள், சிறிய மாகாணங்கள் பயப்படுவதைப் போல் நாங்கள் பயப்படத் தேவையில்லை” என்று அவர் துணிச்சலாக பதிலளித்தார்.*

*பிறகு பதவியை தூக்கி எறிந்து விட்டு இங்கிலாந்து திரும்பும் போது சென்னை மக்கள் பெருவாரியாக திரண்டு வந்து கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தனர் என்று வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. இப்படிப்பட்ட ஆளுநர்களையும் சென்னை மாகாணம் சந்தித்திருக்கிறது என்பதை நினைவூட்டவே நாம் இந்த வரலாற்றுச் செய்தியை குறிப்பிடுகிறோம்.*

## பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த அண்ணாமலை

- **மகாத்மா காந்தி தமிழ்நாட்டில் பிறந்திருந்தால் ஜாதித் தலைவராக மாற்றி இருப்பார்கள் – ஆர்.என்.ரவி**

*பதில் : காந்தி என்பதே ஜாதிப் பெயர் தான்*

- **எனக்கு தெரிந்த ஒரு ஒரு வீரலட்சுமி ஆங்கிலேயர்கள் இருக்கும் போது ஜாதியை எதிர்த்துப் போராடிய கோவில்பட்டி வீரலட்சுமி தான் – அண்ணாமலை**

*பதில் : கோவில் பட்டி வீரலட்சுமி பிறந்தது 1961, இந்தியா சுதந்திரம் பெற்றது 1947.*

- **மருது பாண்டியர்கள் குறித்து தனிப்பட்ட ஆய்வுகள் தான் வந்துள்ளன, ஒரு PhD ஆய்வறிக்கை கூட வந்ததில்லை – ஆர்.என்.ரவி**

*பதில் : 2008 ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிக்காலத்தில் மருதுபாண்டியர்கள் குறித்த ஆராய்ச்சிக்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் ரூ.28 இலட்சம் டெபாசிட் செய்யப்பட்டது. அதன்மூலம் ஆய்வறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.*

- **காமராசர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு ‘ஜாலியான்வாலாபாக்’ சம்பவத்திற்கு எதிராக போராட போட்டக்களத்திற்கு வந்தார் – அண்ணாமலை**

*பதில் : ஜாலியன் வாலாபாக் சம்பவம் நடந்த ஆண்டு - 1919, காமராசர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திய ஆண்டு - 1914*

- **பாரதியார் ஜுலை 31, 1931 ஆம் ஆண்டு கடைசியாக ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையத்தில் உரையாற்றினார் – அண்ணாமலை**

*பதில் : பாரதியார் இறந்தநாள் - செப்டம்பர் 11, 1921*

- **குஜராத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.17,000 வருமானம் – அண்ணாமலை**

*பதில் : குஜராத் மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.3,08 இலட்சம் கடன் உள்ளது.*

- **முதலாவது இந்திய குடியரசு தின அழைப்பிதழை மகாத்மா காந்திக்கு வழங்காமல் அவரை அவமதித்தது காங்கிரஸ் கட்சி – அண்ணாமலை**

*பதில் : முதலாவது குடியரசு நாள் - 26.01.1950, காந்தி இறந்தநாள் - 31.01.1948. குடியரசு தினம் வரைக்கும் தான் காந்தியை நீங்க விட்டுவைக்கவில்லையே அண்ணாமல*

**நன்றி : திமுக தகவல் தொழில்நுட்ப அணி**

# மோடி ஆட்சி இஸ்ரேலை ஆதரிப்பது ஏன்?

# இஸ்ரேல் யூதர்களும் - இந்துராஷ்டிரா பார்ப்பனர்களும் (1)

**விடுதலை இராசேந்திரன்**

‘பாசிசம்’(Fascism) என்கிற சொல்லாடல் பலராலும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சி பாசிச ஆட்சி என்று அனைவரும் பேசி வருகிறார்கள். பாசிசம் (Fascism), நாசிசம் (Nazism), ஜியோனிசம் (Zionism), பிராமினிசம் (Brahmanism) இந்த நான்கு இசங்கள் பற்றிய சுருக்கமான பார்வையை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பாசிசம் என்ற கருத்தாக்கம் இத்தாலியில் ‘முசோலினி’ என்ற சர்வாதிகாரியால் உருவாக்கப்பட்டது. முதல் உலகப் போரின்போது உருவான ஒரு சித்தாந்தம். சர்வாதிகார ஆட்சி, கம்யூனிச எதிர்ப்பு, அதிகார அடக்குமுறை ஆட்சி, மக்களுடைய கருத்துஉரிமைகளை பறிக்கக்கூடிய ஒரு ஆட்சி. முதலாளிகளை வளர்த்துவிட்டு உழைக்கின்ற மக்களை அடிமைப்படுத்துவதற்காக அதிகாரத்தைத் திணித்து சர்வாதிகாரத்தை உருவாக்கி நாடாளுமன்றத்திற்கு பதிலாக பாசிஸ்டுகளைக் கொண்ட நிர்வாக அமைப்புகளை உருவாக்கி ஜனநாயகத்தை முழுமையாகக் குலைப்பது என்பதுதான் முசோலினி உருவாக்கிய பாசிசம்.

முதல் உலகப்போரில் இது தொடங்கியது. Fascis என்ற சொற்களிலிருந்து Fascism என்ற சொல் வருகிறது. ரோம் நாட்டை பேரரசர்கள் ஆண்டு கொண்டிருந்த போது அந்த நாட்டின் நீதிபதிகளின் கைகளிலே ஒரு உருட்டுக் கட்டையும் அந்த உருட்டுக் கட்டையின் நடுவிலே ஒரு கோடாரியும் இருக்கும். அதற்கு ‘Fascis’ என்று பெயர். அதிலிருந்து தான் Fascism (பாசிசம்) என்ற சொற்றொடர் உருவானது.

போரின் வழியாக, அண்டை நாடுகளின் மீது படையெடுப்பதின் வழியாக நாடுகளை அடக்கி ஆள்வதன் வழியாக விரும்புகிற ஒரு ஆதிக்க சமூகம், முதலாளித்துவ சமூகத்தை உருவாக்க முடியும் என்பது முசோலினுடைய கொள்கையாக இருந்தது. 1922ஆம் ஆண்டிலிருந்து 1943ஆம் ஆண்டுவரை இந்த பாசிசக் கொள்கை கோலோச்சிக் கொண்டிருந்தது.

முசோலினி இத்தாலியில் பாசிச ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார் என்றால் அதற்குப் பிறகு ஜெர்மனியில் ஹிட்லர் ஒரு ‘நாசிச’ (Nazism) ஆட்சியை நடத்தினார். இரண்டாவது உலகப் போருக்கு ஹிட்லர் காரணமாக இருந்தார். ஒவ்வொரு நாட்டையும் ஆக்கிரமித்து உலகத்தையே தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பதற்காக பல படையெடுப்புகளை அவர் கொடூரமாக நடத்திக்கொண்டு இருந்தார்.

முசோலினியின் பாசிசம், ஹிட்லரின் நாசிசம் இரண்டுமே இரண்டாவது உலகப் போரில் கைகோர்த்துக் கொண்டு செயல்பட்டது. ஆனால் இரண்டுமே தோல்வியடைந்துவிட்டது என்பது தான் வரலாறு. முசோலினி இரண்டாவது உலகப் போரில் கடுமையான தோல்வியை சந்தித்தப் பிறகு தனது மனைவியுடன் சுவிட்சர்லாந்து நாட்டிற்கு தப்பி ஓட முயன்றார். மக்கள் இராணுவத்தால் தடுக்கப்பட்டு அவர் தனது மனைவி கிளாரா பெட்டக்கி (Clara petacci) உடன் சேர்த்து இருவரும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

சுட்டுக் கொல்லப்பட்டு மீண்டும் இத்தாலிக்கு கொண்டு வரப்பட்டு ‘மிலான்’ (Milan) என்ற நகரத்தில் உள்ள எண்ணெய் விற்பனை நிலையத்தில், இருவரின் சடலத்தையும் இறைச்சிக் கடைகளில் இறைச்சியை தொங்கவிடுவதைப் போல தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டார்கள். பொது மக்கள் அனைவரும் அந்த சடலங்களில் கற்களை எறிந்து மகிழ்ச்சியாகக் கொண்டாடினார்கள்.

அதே போல ஹிட்லர் கொடூரமான ஒரு ஆட்சியை நடத்தினார். தனது கொள்கைக்காக யூதர்களைக் கொன்று அழிக்கின்ற இனப்படு கொலையை நடத்தியவர் ஹிட்லர். அவர் ஒவ்வொரு நாடாகக் கைப்பற்றிக் கொண்டே வந்தார். போலந்து, பிரான்ஸ் என்று ஒவ்வொன்றாக கைப்பற்றினார். இரஷ்யாவிற்கும் படையெடுத்தார் ஆனால் அங்கு கடுமையான நெருக்கடியைச் சந்தித்து தோல்வியடைந்தார். இறுதியில் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

ஆரியர்கள் தான் இந்த உலகை ஆள வேண்டும் அதனால் யூதர்களை கொன்றழிப்பேன் என்று இனப்படுகொலையை நடத்தினார் ஹிட்லர். சித்திரவதைகளுக்காகவே முகாம்களை உருவாக்கினார். இந்த பாசிசத்தையும், நாசிசத்தையும் தற்போது நடந்து கொண்டிருக்கிற பாஜக ஆட்சியுடன் நாம் ஏன் தொடர்புபடுத்திப் பார்க்கிறோம்.

இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு என்பது பாசிசம், நாசிசம் கொள்கைகளை உறுதியாக ஆதரித்திருக்கிறது. பாசிசம் தான் இந்தியாவில் ‘இந்து இராஷ்டிரம்’ அமைக்க சரியான கொள்கை என்று இத்தாலியில் முசோலினி உருவாக்கியதைப் போல, இந்தியாவில் ஒரு சர்வாதிகாரத்தை உருவாக்கி மக்களின் கருத்துரிமைகளைப் பறித்து இராணுவப் பயிற்சிக்கு இந்துக்களை தயார் செய்து இங்கே வாழ்கின்ற இஸ்லாமியர்களை எதிரிகளாக்கி இந்த நாட்டை விட்டு விரட்டியடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பாசிசத்தை வெளிப்படையாகவே ஆதரித்தார்கள். அதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. வரலாறுகளிலும் அவை பதிவாகி உள்ளன.

1931ஆம் ஆண்டு இலண்டனிலே வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக, ஆர்.எஸ்.எஸ் அமைப்பை உருவாக்கியவர்களில் ஒருவரான ‘மூஞ்சே’ என்பவர் இலண்டன் சென்றார். கலந்து கொண்டு இந்தியாவிற்கு திரும்புகிற வழியில் இத்தாலியில் பல இடங்களுக்குச் சென்று அங்கே



முசோலினி நடத்திய பாசிச பள்ளிகள், இராணுவப் பள்ளிகள் ஆகிய அனைத்தையும் பார்வையிட்டு விட்டு, ‘இது ஒரு சிறப்பான கட்டமைப்பு; இதுதான் மக்களை தயார்படுத்தும் சிறப்பான முறை; இதே போலத்தான் இந்தியாவிலும் அமைக்க வேண்டும்’ என்று அந்த பள்ளிகளிலேயே வருகைப் பதிவேடுகளில் அவர் குறிப்புகளை எழுதி வைத்துள்ளார்.

1931ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் தேதி அவர் முசோலினியை சந்தித்தார். “நீங்கள் இத்தாலியில் எப்படி மக்களை ஒடுக்குகிற சர்வாதிகாரத்தை, அடக்குமுறையை, பாசிசத்தை நடத்துகிறீர்களோ அதேபோல ஒரு கொள்கையை இந்தியாவில்

1897ஆம் ஆண்டு சுவிட்சர் லாந்து நாட்டில் பேசில் (Basle) நகரில் யூதர்கள் கூடி, ‘ஜியோனிஸ்ட் காங்கிரஸ்’ என்ற அமைப்புக்கு வடிவம் தந்து 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் யூதர்களை ஒன்று திரட்டினார்கள். யூதர்கள் ஆரியர்களைப்போல தங்களுடைய “இனம் தனித்துவமானது, உயர்வானது” என்றார்கள்.

துவங்கி ‘இந்து இராஷ்டிரத்தை’ உருவாக்கப் போகிறோம்” என்று அவர் முசோலினியை சந்தித்து கூறியிருக்கிறார்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் பார்வையிட்ட முசோலினியின் இராணுவப் பள்ளிகளைப் பாராட்டி குறிப்புகளை எழுதினார் மூஞ்சே. ஆவணக் காப்பகங்களில் அவற்றைத் தேடி பதிவு செய்துள்ளார் இத்தாலி ஆய்வாளர். “I have already started an organisation of my own concerned independently with similar objectives. I shall have no hesitation to raise my voice from the public platform both in India and England. When ever occasion may arise in praise of your Balilla and Facist organisations.”

“இதேபோன்ற இராணுவ அமைப்புகளை ஏற்கனவே நான் சுயமாக சிந்தித்து தொடங்கியிருக்கிறேன். சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உங்களுடைய இராணுவப் பள்ளிகளைப் புகழ்ந்து பொது வெளிகளில் பேசத் தயங்க மாட்டேன்” என்று மூஞ்சே பதிவு செய்திருக்கிறார்.

இந்தத் தரவுகள் அனைத்தும் 2000 ஆம் ஆண்டில் ஆதாரப்பூர்வமாக வெளிப்பட்டது. ‘மார்சியோ காசலோரி’ என்ற ஒரு இத்தாலி ஆய்வாளர். அவர் இந்தியாவில் இந்துத்துவா பற்றி பேசுகிற நிறுவனங்களின் வெளிநாட்டு தொடர்புகளைப் பற்றி ஆராய்ந்து ஒரு ஆய்வு நூலை வெளியிட்டார். (நூலின் பெயர்: Ambiguous Relationship between Indian Nationalism and Nazi-Fascism) அந்த ஆய்வில் இத்தாலி நாட்டில் உள்ள பல ஆவணக் காப்பகங்களுக்கு சென்று அந்த ஆவணக் காப்பகங்களில் உள்ள ஆதாரங்களை தேடிப் பிடித்தார். முசோலினியை மூஞ்சே சந்தித்துப் பேசியதும், மூஞ்சே அந்த பாசிச நிறுவனங்களில் எழுதிய குறிப்புகளையும், சந்தித்த தேதிகளையும் ஆதாரங்களோடு முதன் முதலாக 2000ஆம் ஆண்டு அவர் வெளியிட்டார். அது

‘Economic and Political Weekly’ ஆங்கிலப் பத்திரிக்கையில் 2000ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் தேதி இதழில் பதிவாகியுள்ளது. அங்கிருந்து திரும்பிய மூஞ்சே, இங்கே கோல்வாக்கர் உள்ளிட்ட ஆர்.எஸ்.எஸ். தலைவர்களைச் சந்தித்து விவாதிக் கிறார். பாசிசத்தை ஆதரித்து இந்தியாவில் மாநாடு களை நடத்துகிறார்கள்.

இந்து இளைஞர்களுக்கு இராணுவப் பள்ளிகளை துவங்குகிறார்கள். ஆர்.எஸ்.எஸ் இன் கொடியாக ஹிட்லர் பயன் படுத்திய சுவஸ்திக் கொடியை ஆர்.எஸ்.எஸ் ஏற்றுக் கொண்டது. சுதந்திர இந்தியாவில் சுதந்திரம் பெற்ற போது நாடு முழுவதும் தேசியக் கொடியை ஏற்றிக் கொண்டாடிய போது, 1947 ஆகஸ்டு 15ஆம் தேதி ஆர்.எஸ்.எஸ் தனது தலைமையிடமான நாக்பூரில் சுவஸ்திக் கொடியைத் தான் ஏற்றியது.

அப்போது காவிக் கொடியை ஆர்.எஸ்.எஸ் பயன்படுத்தவில்லை. பிற்காலத்தில் காந்தியை சுட்டுக்கொன்ற நாதுராம் கோட்சே அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு இளைஞர் என்ற உண்மையை ‘நள்ளிரவில் வந்த சுதந்திரம்’ என்ற ஆய்வு நூல் அம்பலப்படுத்தியது.

நாசிசம், பாசிசம் மட்டுமில்லாமல் ஜியோனிசம் (Zionism) என்ற சித்தாந்தமும் உள்ளது. ஜியோனிசம் - யூதர்கள் சட்ட விரோதமாக பாலஸ்தீனர்களிடமிருந்து அபகரித்து உருவாக்கிக் கொண்ட இஸ்ரேல் என்ற யூத நாட்டுக்கான மதம். ‘ஜியோனிசம்’ என்ற சொற்றொடரை 1855ஆம் ஆண்டு வியட்னாம் நாட்டைச் சார்ந்த நதன் பிர்ன்பவும் (Nathan Birnbaum) என்ற யூதர் உருவாக்கினார்.

‘ஜியோன்’ என்ற சொல் கிறிஸ்தவர்களின் மறை நூலான பைபிளில் ஜெருசலம் நகரைக் குறிக்கப் பயன்படுத்தப்படு கிறது. பாலஸ்தீனத்திலிருந்த ஜெருசலம் நகரம், யூதர்களுக்கானது என்பதை பைபிளை ஆதாரமாகக் காட்டி வாதிட்டார்கள் யூதர்கள். 1897ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டில் பேசில் (Basle) நகரில் யூதர்கள் கூடி, ‘ஜியோனிஸ்ட் காங்கிரஸ்’ என்ற அமைப்புக்கு வடிவம் தந்து 50க்கும் மேற்பட்ட நாடுகளில் வாழும் யூதர்களை ஒன்று திரட்டினார்கள். யூதர்கள் ஆரியர்களைப்போல தங்களுடைய “இனம் தனித்துவமானது, உயர்வானது” என்றார்கள். யூதர்களுக்கான நாடு அமைப்பதற்கு முயன்றார்கள். அந்த நாடு இனத்தையும் மதத்தையும் ஒன்றாக்கும் பேரின வாதக் கோட்பாட்டை உள்ளடக்கியிருந்தது.

உலகிலேயே மிகச்சிறந்த அறிஞர்கள், மேதைகள், விஞ்ஞானிகள் என்று சொல்லப்படுகிற பட்டியலில் யூதர்கள் இடம்பெற்றிருந்தார்கள். ஆனாலும் கூட இரண்டாம் உலகப்போரில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட யூதர்கள் தங்களுக்கென்று ஒரு நாடு இல்லை என்ற கவலையோடு பாலஸ்தீனத்தில் ஒரு நாட்டை உருவாக்கிக் கொள்ள பல முயற்சிகளை எடுத்துக் கொண்டார்கள். அவர்களிடம் நிறைய பொருள்வசதி இருந்தது ஆனால் நாடு இல்லை.

உலகத்திலேயே நாடு இல்லாத இனம் என்று இரண்டு இனங்களை ஆய்வாளர்கள் கூறினார்கள். ஒன்று யூத இனம் மற்றொன்று பார்ப்பன இனம். இந்த இரண்டு இனத்தவருக்கும் சொந்த நாடு என்று ஒன்று கிடையாது

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# நங்கவள்ளி - சிந்தாமணியூரில் பரப்புரை சென்னையில் 107வது கூட்டம்

**சேலம் :** நங்கவள்ளி கழகம் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? 22.10.2023 ஞாயிறு அன்று, வெள்ளார், சோளியானூர் பகுதியிலும், தொப்பூர் பேருந்து நிறுத்தம், எருமப்பட்டி பேருந்து நிறுத்தம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

பெரியார் பெருந்தொண்டர் செ.சி. ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். திமுக சேலம் மேற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மா.கதிர்வேல்,

வெள்ளார் ஊராட்சி மன்ற தலைவர் சுகந்தி பழனிசாமி, கழக தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், திவிக கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் இரா.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வெள்ளார் சிவசண்முகம் அவர்கள் தொடக்கவுரையாற்றினர். தொடர்ந்து தருமபுரி மாவட்ட செயலாளர் சந்தோஷ்குமார் - அருண்குமார் குழுவின் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு மாணவர் கழக சுகந்தன் பிரபாகரன், ஆர்.எஸ்.நாகராஜ், வெள்ளார் பகுதி கல்லூரி மாணவர் கபிலன், சோளியானூர் கிருஷ்ணன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் சிறப்புரையாற்றினார்.

வெள்ளார் ஞானபிரகாஷ் நன்றி கூறினார்.

சரவணன், செ.சி.ராமகிருஷ்ணன், சோளியானூர் கிருஷ்ணன் ஆகியோர் உணவு ஏற்பாடு செய்தனர்.

நங்கவள்ளி பகுதி சீ.அன்பு, சந்திரசேகர், வெள்ளார் பகுதி நாகராஜ், அருண், சர்மா,மனோ, வனவாசி பகுதி பன்னீர்செல்வம், தருமபுரி செல்வமணி, இளம்பிள்ளை தங்கதுரை, ஆனந்த் சோளியானூர், மேட்டூர் பகுதி முத்துராஜ், நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

சிந்தாமணியூர் கழகம் சார்பாக எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம் 31.10.2023 செவ்வாய் அன்று பஞ்சு காளிப்பட்டி, செம்மாண்டப்பட்டி, பாரப்பட்டி, சிந்தாமணியூர் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

சிந்தாமணியூர் ரவி தலைமை தாங்கினார். நங்கவள்ளி ஒன்றிய பொறுப்பாளர் பொ.கிருஷ்ணன், சேலம் மாவட்ட இளைஞரணி தலைவர் தங்கதுரை, நங்கவள்ளி நகர செயலாளர் சு.பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்.எஸ்.நாகராஜ் வரவேற்புரையாற்றினார்.

சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு பகுத்தறிவு பாடல்களை பாடினார்.

தொடர்ந்து சேலம் மாவட்ட அமைப்பாளர் ஏற்காடு பெருமாள், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்காடு தேவ பிரகாஷ், வனவாசி நகர செயலாளர் பழ.உமாசங்கர், பெரியார் பெருந்தொண்டர் அண்ணாதுரை ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

செம்மாண்டப்பட்டி ரஞ்சித்குமார் நன்றி கூறினார்.

செம்மாண்டப்பட்டி ரஞ்சித்குமார், சிந்தாமணியூர் ஜெயச்சந்திரன் ஆகியோர் தேநீர், உணவு ஏற்பாடுகளை செய்தனர்.

தங்கமாபுரிப்பட்டினம் ராமச்சந்திரன், செம்மாண்டப்பட்டி ரஞ்சித்குமார், சிந்தாமணியூர் ஜெயச்சந்திரன், பெரியசாமி, செம்மாண்டப்பட்டி கந்த வடிவேலு, ஏற்காடு செல்வமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

**சென்னை :** சென்னை மாவட்டக் கழகம் சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? 107வது கூட்டம் 27.10.2023 மாலை 5 மணிக்கு பல்லாவரம் ரங்கநாத முதலி தெருவிலும், 10வது கூட்டம் இரவு 8 மணிக்கு பழைய பல்லாவரம் பிவி.வைத்தியலிங்கம் தெருவிலும் நடைபெற்றது.

கூட்டத்தின் தொடக்கமாக உமாபதி - பொன்ராஜ் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அனைத்து தெருமுனைக் கூட்டங்களிலும் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

ரங்கநாத முதலி தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் எழுத்தாளர் விஜயபாஸ்கர், மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் எட்வின் பிரபாகரன், சிபிஐ(எம்) பிரபாகரன் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

பிவி.வைத்தியலிங்கம் தெருவில் நடைபெற்ற கூட்டத்தில் கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், விக்னேஷ், விசிக சரவணன் உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர்.

111வது கூட்டம் 29.10.2023, சனிக்கிழமை மாலை 6 மணிக்கு காமராஜபுரம் பேருந்து நிறுத்தத்திலும், 112வது கூட்டம் இரவு 8 மணிக்கு தாம்பரம் வால்மீகி தெருவிலும் நடைப்பெற்றது.

பின்னர் திமுக 39வது வட்டச் செயலாளர் தனவந்தன், திராவிடர் கழக சோழிங்கநல்லூர் மாவட்டச் செயலாளர் விஜய் உத்தமராஜ், சிபிஐ(எம்) பாரதி, இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார் உள்ளிட்டோர் தெருமுனைக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினர்.

SDPI செம்பாக்கம் நகரச் செயலாளர் தமீம் அன்சாரி, காங்கிரஸ் ஓபிசி பிரிவு பெஞ்சமின் மற்றும் பொதுமக்கள் பலரும் ஆர்வத்துடன் கூட்டத்தில் பேசப்பட்ட கருத்துக்களை கேட்டறிந்தனர்.

30.10.2023 திங்களன்று 113வது கூட்டம் மாலை 6 மணிக்கு குரோம்பேட்டை அஞ்சலகம் முன்பும், 114வது கூட்டம் இரவு 8 மணிக்கு மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையிலும் நடைபெற்றது.

தொடர்ந்து திக மாவட்டத் தலைவர் முத்தையன், சிபிஐ(எம்) தாம்பரம் தொகுதிச் செயலாளர் தா.கிருஷ்ணா, பகுதிச் செயலாளர் ராமானுஜன், பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெயச்சந்திரன், நில உரிமை மீட்பு மாவட்ட அமைப்பாளர் ரமேஷ், வணிகர் அணி மாவட்ட அமைப்பாளர் சுரேஷ், CPI(ML) மாவட்ட கமிட்டி உறுப்பினர் தினேஷ் குமார், CPI(ML) இளைஞர் அமைப்பு மாநில அமைப்பாளர் ராஜேஷ் குமார், மாநில துணைப் பொதுச் செயலாளர் யாகூப், சபிபுல்லா, அப்துல் கரீம் அரபி, மாவட்ட துணைச் செயலாளர் ஷாகுல் அமீது, அன்சாரி, மமக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அப்துல் முனாப் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

எது திராவிடம்? எது சனாதனம்? 115வது தெருமுனைக் கூட்டம் 31.10.2023 செவ்வாய் மாலை 6 மணிக்கு குரோம்பேட்டை - CLC Works சாலையிலும், 116வது கூட்டம் இரவு 8 மணிக்கு மேற்கு தாம்பரம் - அரங்கநாதபுரம் 3வது தெருவிலும் நடைபெற்றது.

மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் ம. கி. எட்வின் பிரபாகரன் கருத்துரையாற்றினார்.

நிகழ்வில் திமுக வட்டச் செயலாளர் ஜீவி நன்கொடையாக ரூ.1000 வழங்கியதுடன், ஏராளமான தோழர்களை கூட்டத்திற்கு அழைத்து வந்தார்.

திமுக முன்னாள் கவுன்சிலர் ரகுபதி, சுரேஷ் ஆகியோர் கழகத்தின் முயற்சியை பாராட்டினர்.

வணிகர்கள் ரூ.1,400 வழங்கினர். கழகத் தோழர் அருண் கோமதி தன் நண்பர்களிடம் நன்கொடையாக ரூ.2,800 தெருமுனைக் கூட்ட வளர்ச்சி நிதியாக வழங்கினார்.

விசிக பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெயச்சந்திரன் இரவு உணவு ஏற்பாடு செய்தார்.

இராயப்பேட்டை அருண், அட்டி அருண், அஜித், செந்தில், வீரா, சூர்யா, எட்வின் பிரபாகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பெரியாரை இழிவுபடுத்தும் சாட்டை துரைமுருகன் : கழகம் புகார் மனு

வேலூர் : பெரியார் குறித்து அவதூறு பரப்பிய சாட்டை துரைமுருகனை கைது செய்ய கோரி ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட கழகம் சார்பில் புகாரளிக்கப்பட்டது.

கோவை : தமிழ்நாட்டின் சமூகநீதி அரசியலின் முன்னோடியாக திகழும் தந்தை பெரியார் அவர்களை இழிவுபடுத்தியும், வதந்திகளை பரப்பியும் அதே போல தமிழ்நாட்டில் ஜாதிய மோதல்களை உண்டாக்கும் விதமாக பேசி வரும் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகியான சாட்டை துரைமுருகன் என்ற நபர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கக்கோரி கோவை மாநகரக் கழகம் சார்பில் கோவை மாநகர காவல் ஆணையாளர் அலுவலகத்தில் மனு அளித்தனர் .

திருச்சி : தந்தை பெரியார் பற்றி தொடர்ந்து அவதூறு பரப்பி வரும் நாம் தமிழர் கட்சி நிர்வாகி சாட்டை துரைமுருகனை கைது செய்யக் கோரி திருச்சி மாவட்டக் கழகம் சார்பில் மாநகர உதவி ஆணையரிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.

கோபி : தந்தை பெரியார் மீது தொடர்ந்து அவதூறு பரப்பி வரும் நாம் தமிழர் கட்சியின் சாட்டை துரைமுருகனை கைது செய்யக்கோரி 29.10.2023 ஞாயிற்றுக்கிழமை ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கோபி காவல் நிலையம், சத்தி காவல் துணைக் கண்காணிப்பாளர், நம்பியூர் காவல் நிலையம் மற்றும் கடத்தூர் காவல் நிலையத்தில் புகார் மனு அளிக்கப்பட்டது.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், மாவட்டச் செயலாளர் செல்வக்குமார், மாவட்ட அமைப்பாளர் கோபி நிவாசு, மாவட்ட இளைஞரணிச் செயலாளர் ந.கலைவேந்தன், அ.ரமேசு, அருளானந்தம், ராவணன், அழகிரி, ஜெ.ராஜன் பாபு, நம்பியூர் நகரத் தலைவர் அழகிரி, மனோஜ் மற்றும் தோழமை இயக்கத்தினர் உடனிருந்தனர்.

திருப்பூர் : தந்தை பெரியார் குறித்து பொய்யான செய்திகளை கூறி அவதூறு பரப்பி இழிவாக பேசிய நாம் தமிழர் கட்சியின் சாட்டை துரைமுருகன் என்பவரை கைது செய்யக்கோரி 27.10.23 வெள்ளியன்று திருப்பூர் திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் திருப்பூர் காவல் துறை ஆணையாளர் அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டது.

சேலம் : தந்தை பெரியார் குறித்து ஒருமையில் பேசி பொய்யான செய்திகளை கூறி அவதூறு பரப்பி வரும் நாம் தமிழர் கட்சியின் சாட்டை துரைமுருகன் என்பவரை கைது செய்யக்கோரி 28.10.23 சனியன்று சேலம் மாவட்ட திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் சேலம் காவல் துறை துணை ஆணையாளர் அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டது. புகாரை பெற்றுக்கொண்ட துணை ஆணையாளர் அவர்கள் சைபர் கிரைம் பிரிவுக்கு பரிந்துரைத்தார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : November 03, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran